Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை (28-12-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 28

# திம்பு கோட்பாட்டுக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 28

"திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியம் எதுவும் கிடையாது. திம்பு கோட்பாடு என்ற கோரிக்கை அர்த்தமற்றது".

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று ரூபவாஹினியில் "நேருக்கு நேர்" என்ற "ஜன மண்டல" நிகழ்ச்சியில் தொலைபேசி மூலம் பொது மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில் அளித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது மாவீரர் நாள் உரையில் திம்புக் கோட்பாடுகள் குறித்து பிரஸ்தாபித்

(9 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப கோபாலசாமியும் பிளேட்டை மாற்றுகிறார் போல....!

# தமிழ் - முஸ்லிம் மோதல்! வீடுகள், கடைகள் எரிப்பு!!

## மாத்தளையில் ஊரடங்கு அமுல்

கொழும்பு, டிச. 28

மாத்தளையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயம் அடைந்தனர். வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன.

கொல்லப்பட்டவர் முஸ்லிம் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 25 கடைகள் வரை நகரில் எரிக்கப்பட்டன. அத்தனையும் தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் என்று கூறப்படுகிறது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாத்தளையில் உள்ள சினிமா தியேட்டர் ஒன்றில் படம் பார்த்துக் கொண்டிருந்த சமயம் இரு கோஷ்டிகளுக்கிடையில் மோதல் இடம் பெற்றது.

இதனையடுத்து மாத்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## கலவரத்தை அடக்க ராணுவம்: தமிழர்கள் காடுகளில் தஞ்சம்

கொழும்பு, டிச. 28

மாத்தளையில் ஏற்பட்டுள்ள கலவரத்தை அடக்க ராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் பலர் காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இது குறித்து மாத்தளை நகரசபை உறுப்பினர் முத்துசாமி சிவஞானம் பி.பி.ஸிக்கு தெரிவித்ததாவது:-

தமிழ் இளைஞர் குழு ஒன்றுக்கும முஸ்லிம் குழு ஒன்றுக்கும் இடையில் திரைப்பட மாளிகையில் ஏற்பட்ட ஒரு சிறிய சம்பவத்தை அவ்விடத்தில் வைத்தே சமாதானப் படுத்தி அனுப்பிய போதிலும் அதன் பின்னர் ஏற்பட்ட வாள் வீச்சு, கத்திக் குத்துச் சம்பவத்தால் ஒருவர் இறந்துள்ளார்.

இதனால் முஸ்லிம்களைத் தமிழர்கள் தாக்கியதாக வதந்தி பரவி தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கிராம அலுவலர் கைது!

மட்டக்களப்பு, டிச. 28

மட்டக்களப்பு அம்பிளாந்துறை கிராம அலுவலர் தேசிய புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# சீனா - ஹொங்கொங் போன்று ஒருநாடு, இருஆட்சிமுறைகள்

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண தொண்டா யோசனை

கொழும்பு, டிச. 28

"இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சீனா-ஹொங்கொங் பாணியிலான ஒரு நாடு, இரு ஆட்சி முறைகள் எனும் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும்."

இப்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் கோரி உள்ளார்.

எண்ணிக்கை பலத்திலிருந்து உரிமைகள் உருவாவதில்லை என்ற தமிழர்களின் சிந்தனையின் அத்திவாரமாக சீன - ஹொங்கொங் ஆட்சி முறை அமைந்திருக்கின்றது என்று அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

சீனாவும் ஹொங்கொங்கும் செய்து கொண்டிருக்கும் ஏற்

(9ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு ரெலோ உறுப்பினர் மரணம்

### தளவாய்ப் பகுதியிலும் தாக்கு

மட்டக்களப்பு, டிச. 28

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பொதுச் சந்தையில் நேற்றுக்காலை ரெலோ உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். சிவலிங்கம் சிங்கராசா (வயது-24) என அவர் அடையாளம் காணப்பட்டார்.

அதேநேரம் நேற்று முன்தினம் தளவாய் என்ற இடத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் முகமது பாரூக் நவ்வர் அலி (வயது-20) என்ற தேசிய துணைப் படை வீரர் காணாமற்போயுள்ளதாக பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இத்தாக்குதலில் என்.வேதநாயகம் (வயது-28), என். அமலநாதன் (வயது-22), ந. நந்தகுமார் (வயது-23), என் இராஜேந்திரம் (வயது-21), ப.பிரேமதாசா (வயது-19), ரி. ரவிக்குமார் (வயது-22) ஆகிய தேசிய துணைப்படை வீரர்கள் கொல்லப்பட்டனர் என துணைப்படைவட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-7-21)

## காணாமற் போனோர் சங்க உறுப்பினர்கள் கொழும்பில்

### நாளை ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிச. 28

சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ். குடாநாட்டில் கைதாகி காணாமல் போனோரின் நிலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த 12 பேரைக் கொண்ட பிரதிநிதிகள் குழு நேற்று கொழும்பு சென்றுள்ளது.

காணாமல் போனோர்களில் 400 பேரின் புகைப் படங்களை சமாதான நீதிவானின் உறுதிப்படுத்தலுடன் இவர்கள் தம்முடன் கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இவர்கள் நாளை காலை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள்.

சங்கத்தலைவர் பரமநாதர் செல்வராசா கருத்துத் தெரிவிக்கையில், "பல முயற்சிகள் எடுத்தோம், பல பல போராட்டங்களை நடத்தினோம். பல விசாரணைகளுக்கும் சென்றோம். ஆனால் எமக்கு எந்த நியாயமும் கிடைக்கவில்லை. எனவே தான் ஜனாதிபதியைச் சந்திக்க வந்துள்ளோம். இங்காவது எமக்கு நன்மை கிட்டும் என நம்புகின்றோம்" எனக் கூறினார்.

(இ-9)

## வெலிகந்தவில் தாக்குதல்

மட்டக்களப்பு, டிச, 28

மட்டக்களப்பு பொலன்னறுவை வீதியில் வெலிகந்த என்ற இடத்தில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர்.

ஜெயந்திபாய இராணுவ முகாமிலிருந்து வீதிக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடச்சென்ற படையினர்மீதே புலிகள் மறைந்திருந்து தாக்குதல் மேற்கொண்டனர் என்றும்- இம்மோதலில் மேலும் 3 படையினர் காயம் அடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

## இலங்கைப் போராளிகளுக்கு தமிழகத்தில் ஆதரவு தரோம்!

### கோபாலசாமி நேற்று தெரிவிப்பு

சென்னை, டிச. 28

"இலங்கைப் போராளிகள் குழு எதற்கும் தமிழ் நாட்டில் ஆதரவு வழங்க மாட்டோம்"

மேற்கண்டவாறு மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலர் வை. கோபாலசாமி நேற்று சென்னையில் தெரிவித்தார்.

நேற்றுச் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், இலங்கைப் பிரச்சினைக்கு தமிழீழம் தான் ஒரே தீர்வு என எமது கட்சி கருதினாலும், தமிழ் நாட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசதுரை புவனேஸ்வரி

நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த இ. புவனேஸ்வரி 27-12-97 சனிக்கிழமை அதிகாலை 1 00 மணியளவில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா இராசதுரையின் அன்பு மனைவியும், பரமானந்தம், திருநாவுக்கரசு, சண்முகராசா, கோபாலகிருஷ்ணன், திருமதி உருத்திரா திருச்செல்வம், காலஞ்சென்ற தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற திருமதி தங்கரெத்தினம் நடராசா மற்றும் செல்வி கனகேஸ்வரி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28-12-97 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செல்வி கனகேஸ்வரி இராமலிங்கம் (மலர்)
(சகோதரி)

619, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(52144)

## செல்வி குலமணி குலசிங்கம்

துன்னாலை வடக்கைச் சேர்ந்த செல்வி குலமணி குலசிங்கம் 26-12-97 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

இவர் திரு. குலசிங்கம், திருமதி மீனாட்சிப்பிள்ளை (கண்மணி) குலசிங்கம் அவர்களின் அன்பு மகளும், செல்வி குமுதினி (கலைப்பட்டதாரி, வெளிவாரி) அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-12-97 இன்று ஞாயிறு காலை 10 00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செல்வி கு. குமுதினி

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
(52169)

## வல்லிபுரம் தம்பிராசா

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தம்பிராசா அவர்கள் 25-12-97 வியாழக்கிழமை அன்று கொக்குவிலில் காலமானார்.

அன்னார் பூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், சூரியவதனா, சந்திரலிங்கம், சூரியலிங்கம் (சுவிஸ்), துரைலிங்கம், சந்திரமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற கோபாலவடிவேல் மற்றும் ஜீவமோகினி, அருந்தவராணி (இந்தியா), வாசவன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரத்தினவடிவேல் (டென்மார்க்), இராசவேல் (சுவிஸ்), ஞானவேல் (நெதர்லாந்து), ரஜனன் (கனடா) ஜீவகன், சோபிதா, சதீஸ்கான் (இந்தியா), வினோதன் ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-12-97 இன்று காலை 10 மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. கே. வாசவன்
(மருமகன்)

வேதக் கோயிலடி,
K K S வீதி,
கொக்குவில்.
(52152)

## சைவப்புலவர் சி. செல்லத்துரை

(இளைப்பாறிய சிரேஷ்ட ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாசாலை, மாத்தனை, தெல்லிப்பழை)

காங்கேசன்துறை, தையிட்டியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது உரும்பிராய் கிழக்கு "சிவோகம்" இல்லத்தில் வசிந்தவருமான சைவப்புலவர் சின்னப்பு செல்லத்துரை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பு நாமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரனும் மற்றும் அன்னபூரணியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி இராசமனோகரி மற்றும் பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய நீர்ப்பாசன உத்தியோகத்தர்), திருமதி சிவயோகவல்லி, இராசமனோகரன் (ஜேர்மனி), திருமதி சறோஜா, திருமதி சிவானந்தவல்லி (ஜேர்மனி), தவகுமாரன (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வெ. சண்முகரத்தினம் (இளைப்பாறிய ரயில்வே உத்தியோகத்தர்), திருமதி சறோஜினி தேவி, ப. தருமலிங்கம் (பரிசோதகர், இ.போ.ச.), திருமதி சந்திரா (ஜேர்மனி), வி. யோகேஸ்வரன் (சிமெந்து கூட்டுத்தாபனம்), த. பிரபாகரன் (ஜேர்மனி), திருமதி மங்களேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திருமதி பொன்னம்மாவின் சகோதரனும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்லையாவின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-12-97 ஞாயிறு காலை 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. பாலசுப்பிரமணியம்
(மகன்)

உரும்பிராய்.
(49890)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், டிச. 28

சங்கானை வெல்லில் இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் திருவாசக முற்றோதல் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (உ-4)

★ ★ ★

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கம் (வாரிவனேசுரம்) கடந்த 16ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி வரை இப்பகுதியில் உள்ள ஆலயங்களில் காலை முதல் மாலை வரை திருவாசக முற்றோதல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் பிரகாரம் இன்று காலை 8 30 மணி தொடக்கம் தென்மராட்சி கச்சாய் வீதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ நடராச முருகன் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (உ-30)

## ஓட்டோ சங்கம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிச. 28

இடப்பெயர்வு காரணமாக செயலிழந்து போன ஓட்டோ ஓட்டுநர்களின் சங்கம் மீண்டும் புனரமைக்கப்பட உள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3 30 மணியளவில் ஈ. பி. டி. பி. யாழ்ப்பாணப் பணிமனையில் நடந்த கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஓட்டோ ஓட்டுநர்கள், மற்றும் ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி 9 மணிக்கு ஈ.பி. டி. பி. அலுவலகத்தில் வைத்து சங்க உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

வதிரி, டிச. 28

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக வைர விழாவை முன்னிட்டு நிகழ்த்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை தொண்டமனாறு யுனைட்டெட் விளையாட்டு கழகத்தை எதிர்த்துக் என். சி. சி. விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது
(இ-8)

## நுண்கலைத்துறை மாணவருக்கு

யாழ்ப்பாணம், டிச. 28

நாளை திங்கள் மதியம் 1.00 மணிக்கு இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களை மருதனார்மடம் நுண்கலைத்துறையில் கூடுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## ஹெந்தலவில் புகையிலை சுருட்டு

தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்காக பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்த ஹெந்தல கபலில் புகையிலை, சுருட்டு என்பன கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஏற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் தனியார் வர்த்தகர்களினால் வெற்றுச்சோடாப்பெட்டிகள். காட்போட்டிலான வெறும் பிஸ்கட்பெட்டிகள் என்பனவும் ஏற்றப்பட்டுவருகின்றன. (இ-173)

### லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
ரஜனி, நக்மா நடித்த
[illegible]
நேரம்: 10-30, 2-30
(51893)

# மரண அறிவித்தல்கள்

## தம்பர் தம்பிநாதர்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பர் தம்பிநாதர் 27-12-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டிப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்லத்துரை (இந்தியா), வேலாயுதபிள்ளை, புலேந்திரன் (டென்மார்க்), புவனேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற நல்லம்மா ஆகியோரின் தகப்பனும், சாரதாதேவி, தனலட்சுமி, சத்தியபாமா, காலஞ்சென்ற புவனேஸ்வரி [ஆசிரியை], சாரதாதேவி (பொது நூலகம், கொடிகாமம்), விஸ்வநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (28-12-97) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கச்சாய் பாலாவித்தாழ் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. வேலாயுதபிள்ளை
(மகன்)

'சாந்தி'
கச்சாய் வீதி,
கொடிகாமம்,
(55176)

## செல்வி எமிலி அருள்ராசமலர் தம்பிமுத்து (கிச்சி)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி எமிலி அருள்ராசமலர் தம்பிமுத்து அவர்கள் 27-12-97 நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி W. H. தம்பிமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், திருமதி இரஞ்சி கனகசுந்தரம்' திருமதி, சுகிர்தம் தயானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற விக்ரர் கனகசுந்தரம் மற்றும் தயானந்தன் ஆகியோரின் மைத்துனியும், இரஞ்சினி, இராஜினி (கனடா), இரஞ்சித்குமார் (டென்மார்க்). ஜோய் சுகிர்தானந்தன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும், பாலேந்திரா, சாந்தகுமார் (கனடா), பவதாரணி (டென்மார்க்) ஆகியோரின் மாமியும், வேணுஷா, ரஜீவ், ஷாறா, றிசோக், பிரவீன், ஷாரணா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (28-12-97) இன்று காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை வடக்கு திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி இரஞ்சி கனகசுந்தரம்
(சகோதரர்)
திரு திருமதி தயானந்தன்
(சகோதரர்)

'ரஞ்சஸ்தான்',
ஏழாலை.
(52162)

## பரமு நவரத்தினம்

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமு நவரத்தினம் 27 12-97 இல் அகாலமரணமானார்.

இவர் கந்தையாவினதும் காலஞ்சென்ற வள்ளியம்மையினதும் அன்பு மகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜனந்தீசன், மகிந்தீசன், தீபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, கெங்காதேவி, கிருபாலரத்தினம், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (28-12-97) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி

விளானை, களபூமி,
காரைநகர்.
(52178)

## நாகலிங்கம் - சாந்தலிங்கம்

(சாந்தப்பா-கட்டுவன்)

மயிலிட்டி தெற்கு. கட்டுவனைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வலி. வடக்குப் பிரதேச சபை மின்சார ஊழியர் நாகலிங்கம் சாந்தலிங்கம் 27-12-97 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (விதானையார்) இலட்சுமிதம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்கலான சின்னக்குட்டி இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவராஜலிங்கம், இராசபூபதி (கனடா), காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் ஞானபூபதி. சிவஞானலிங்கம் (நோர்வே), நேசபூபதி (சங்கீத ஆசிரியை, கொழும்பு R. C T. M S.). சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசிங்கம் (கனடா), பாலசுப்பிரமணியம் (Beby Travels and Communication Bambalapitiya) அநு. வை. நாகராஜன் (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்) நகுலாம்பிகை, மங்களேஸ்வரி, தற்பராதேவி (நோர்வே), பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-12-97 இன்று காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பகல் 12-00 மணியளவில் உரும்பிராய் இருளன் இந்து மயானத்தில்தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சா. செல்லம்மா
(மனைவி)

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(52163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதமிருக்கும் கவுண்டா மறைவிடத்தில் தடுத்து வைப்பு!

லண்டன், டிசம்பர். 28

கடந்த வியாழனன்று ஸாம்பிய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்ட அந்நாட்டின் முன்னாள் அதிபர் கெனத் கவுண்டா (வயது 73) தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்ததை அடுத்து, பெயர் குறிப்பிடப்படாத மறைவிடம் ஒன்றுக்குஹெலிக்கொப்டர் மூலம் அவர் பலவந்தமாகக் கூட்டிச் செல்லப்பட்டார்.

தம்மை நீதிமன்றத்தில் நிறுத்தி தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், சந்தேகங்கள் என்னவென்பதை அங்கு பகிரங்கப்படுத்தும் வரை தாம் உணவு அருந்தப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்றுக் காலை சற்று நேரம் நீதிமன்றம் ஒன்றின் முன்வால் நிறுத்தப்பட்ட அவர்பின்னர், பெயர் குறிப்பிடப்படாத மறைவிடம் ஒன்றுக்குஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டார்.

கவுண்டா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், அவரது ஆதரவாளர்கள் நீதிமன்றுக்கு வெளியே திரண்டு நின்று அவருக்கு ஆதரவான கோசங்களை எழுப்பினர்.

தற்போது ஸாம்பியாவில் உள்ள அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் காரணம் காட்டாமல் எவரையும் நான்கு வாரங்கள் தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியும்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தோல்வியில் முடிந்த புரட்சிச்சதி தொடர்பாகவே கவுண்டா கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

ஆனால் இப்புரட்சி சதிக்கும் தமக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லையென்றும்—

அது நடந்ததாகக் கூறப்படும் சமயத்தில் தான் தென்னாபிரிக்காவில் இருந்ததாகவும்—

கெனத் கவுண்டா ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டிலிருந்து கடந்த திங்களன்று நாடு திரும்பிய கவுண்டா, மூன்று நாள்களின் பின்னர் கைது செய்யப்பட்டார்.

1964 ஆம் ஆண்டு முதல் 1991 வரை 27 ஆண்டுகள் ஸாம்பிய அதிபராக இருந்தவர் கவுண்டா என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## கம்போடிய இணைப் பிரதமர் நாடு திரும்புவார்

கம்போடியாவில் பதவி இறக்கப்பட்ட இணைப்பிரதமர் இளவரசர் ரணரிட் நாடு திரும்ப முடிவு செய்துள்ளார்.

ஆனால் தாம் மீண்டும் மேது பதவியை கோரப்போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடு சென்ற சமயம் பதவியைப் பறிகொடுத்த இளவரசர் அடுத்த மாதம் 15ஆம் திகதி நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3)

## குஜ்ரால் போட்டியிடும் தொகுதி குறித்துச் சர்ச்சை

புதுடில்லி, டிச, 28

நடைபெறவிருக்கும் இந்தியப் பொதுத் தேர்தலில் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் எந்த மக்களவைத் தொகுதியில் போட்டியிடுவார் என்று தெரியவில்லை.

பஞ்சாபியரான குஜ்ரால் பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தர் தொகுதியிலிருந்து போட்டியிடுவதை அகாலி தளம் வரவேற்கும் என்று சிரோமணி குருத்வார பிரபந்தக் குழுத் தலைவர் குருசரண்சிங் டோரா சண்டிகரில் புதன் கிழமை தெரிவித்தார்.

அகாலி தளத்தின் தோழமைக் கட்சியான பாரதீய ஜனதா, ஜலந்தரை குஜ்ராலுக்கு விட்டுத் தருவதை ஆட்சேபித்திருக்கிறது. ஆனால், ஜலந்தரை அகாலி தளம் தனக்காக வாங்கிக்கொண்டு குஜ்ராலை அங்கே நிறுத்தும் என்று டோரா தெரிவித்தார்.

ஆனால் ஐக்கிய முன்னணி அரசின் பிரதமரான குஜ்ராலுக்கு தனது கூட்டணிக்கட்சி ஒன்று ஆதரவளிக்க முன்வந்திருப்பது பாரதீய ஜனதாக் கட்சியை சீற்றமுறச் செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

பஞ்சாபின் ஜலந்தர் தொகுதியிலிருந்து பிரதமர் ஐ. கே. குஜ்ரால் போட்டியிட்டாலும் அவருக்கு எதிராக அங்கு பாரதீய ஜனதா வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்று அக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### உலக அரங்கில்

## இராமநாதபுரம் அருகே இயற்கை எரிவாயு

சென்னை, டிச. 28

தமிழ்நாடு இராமநாதபுரம் அருகே ராமன்வலசை கிராமத்தில் நிலத்தடியில் 30 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு இயற்கைவாயு இருப்பதை இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் நடத்திய சோதனையில் கண்டு பிடித்துள்ளது.

இந் நிறுவனம் கடந்த ஜூலை மாதம் ராமன்வலசையில் சோதனையைத் துவக்கியது. 3,300 மீற்றர் துளையிட்டு ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயித்தனர். துரப்பணப் பணி நடந்த போது 2,900 மீற்றர் ஆழத்திலேயே நிலத்தடி இயற்கை எரிவாயு உள்ளதை கண்டு பிடித்தனர்.

சுமார் 30 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் இயற்கை எரிவாயு இப்பகுதியில் உள்ளது.

நாளொன்றுக்கு 1.4 லட்சம் கன மீற்றர் இயற்கை எரிவாயுவை இந்ததுரப்பணக் கிணற்றிலிருந்து பெற முடியுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. அதிக எண்ணெய் தன்மை இல்லாமல் முழு எரிவாயு தன்மையுடன் இங்கு வாயு உள்ளதாகக் கூறப்பட்டது. (உ)

## பாகிஸ்தானில் ரயில் விபத்தில் 32 பேர் பலி

இஸ்லாமாபாத், டிச. 28

பாகிஸ்தானில் இடம்பெற்ற ரயில் விபத்து ஒன்றில் 32 பேர் உயிரிழந்தனர். சுமார் 40 பேர் காயமடைந்தனர்.

இஸ்லாமாபாத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிவேகப் பயணிகள் வண்டி ஒன்று சிறிய நிலையத்தில் தரித்து நின்ற இன்னொரு வண்டியுடன் மோதிய போதே இந்த விபத்து இடம் பெற்றது. (உ-3)

## அ.தி.மு.க.- ம.தி.மு.க.-பாரதீய ஜனதா தேர்தலுக்குத் தொகுதிப் பங்கீடு

சென்னை, டிச. 28

தமிழகத்தில் அ.தி.மு.க-பாரதீய ஜனதாக் கூட்டணியில் தொகுதிப்பங்கீடு பூர்த்தியாகியுள்ளது.

புதுவை உட்பட தமிழகத்தில் உள்ள 40 மக்களவைத் தொகுதிகளில் அ.தி.மு.க, 20 அல்லது 21 தொகுதிகளை தனக்கு வைத்துக் கொள்ளும்.

மீதமுள்ள தொகுதிகளில் கோபாலசாமி தலைமையில் அ.தி.மு கவுக்கு ஏழும்பாரதிய ஜனதாக்கட்சிக்கு ஆறும், டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சிக்கு நான்கும், சுப்பிரமணியசுவாமி, வாழப்பாடிராமமூர்த்தி ஆகியோரின் கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதியும் ஒதுக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோவை, மதுரை, கடலூர், வந்தவாசி போன்ற தொகுதிகளைப் பெறுவதில் கூட்டணிக்கட்சிகளிடையே போட்டி நிலவுகிறது.

சுமுக தீர்வுஏற்படுத்துவதற்கான பேச்சு வார்த்தை நடைபெறுகின்றன.

ம.தி.மு.க. 13 தொகுதிகளையும், பாரதீய ஜனதா 10 தொகுதிகளையும் கோரியிருக்கின்றன.

ஆனால் தொகுதிகளை ஒதுக்குவதில் அ.தி.மு. கவின் விருப்பே இறுதியானதாக அமையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (உ-3)

## ஆப்கானில் யுத்த நிறுத்தத்துக்கு அமெ.-ரஷ்யா கூட்டாக வற்புறுத்தல்

மாஸ்கோ, டிச 28

ஆப்கானிஸ்தானில் சண்டையிட்டு வரும் படைகளை தங்களிடையேயான போர் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறும்—

கூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வழி வகை செய்யுமாறும் —

ரஷ்யாவும், அமெரிக்காவும் வற்புறுத்திக்கேட்டுள்ளன.

போரினால் சீரழிந்து போயுள்ள ஆப்கானிஸ்தான் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு வல்லரசுகள் தலையிடுவதை நிறுத்தி விடுமாறும் இந்த இரு நாடுகளும் வற்புறுத்திக் (கேட்)டுள்ளன.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த உயர் மட்டப்பிரதிநிதிகள் குழு ஒன்றுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பின்னர் இந்தத் தகவல்கள் அடங்கிய அதிகாரபூர்வமான அறிக்கை ஒன்று நேற்று முன்தினம் மாஸ்கோவில் வெளியிடப்பட்டது.

ஆப்கானிஸ்தான் பிரச்சினை குறித்து ரஷ்ய அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தப் பிரதிநிதிகுழுஇப்போது மாஸ்கோவுக்குச் சென்றுள்ளது.

## கியூபாவில் கிறிஸ்மஸ் முதல் தடவையாக!

லண்டன், டிச. 28

கம்யூனிஸ்ட் நாடான கியூபாவில் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகின்றது.

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் கோரிக்கையை ஏற்று கடந்த வெள்ளிக்கிழமை சியூபாவில் கிறிஸ்மஸ் விடுமுறை தினம் வழங்கப்பட்டது.

இது தொடர்பான அறிக்கையை கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோ விடுத்தார்.

புனித திருத்தந்தை அடுத்த மாதம் கியூபா செல்லவிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில ஆண்டுகளாக சமயம் மீதான கெடுபிடிகள் கியூபாவில் தளர்த்தப்பட்டு வருகின்றது.

கியூபாவில் கிறிஸ்மஸ் விடுமுறை வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்நாட்டின் இளம் சந்ததியினர் பலருக்கு கிறிஸ்மஸ்ஸின் தாற்பரியமும் அதை யொட்டிய விடுமுறையின் காரணமும் தெரியாது என்று கூறப்படுகிறது.

## கடும் குளிரில் வட இந்தியா!

### மூன்று பேர் மரணம்

இந்தியாவின் வடபகுதியில் கடுமையான குளிர் காற்று விடாமல் தொடர்ந்து வீசுகிறது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் கடும் குளிர் காரணமாக இருவரும்—

ராஜஸ்தானில் ஒருவரும் இறந்துவிட்டனர்.

உத்தரப்பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் சூழல் வெப்பநிலை குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைந்து விட்டதாக லக்னோவில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையே —

தலைநகர் டில்லியிலோ நடுங்க வைக்கும் குளிர் காற்றும் பனிமூட்டமான வானமும் இந்தப் பருவகாலத்தின் சூழல் வெப்பநிலையை மோசமான அளவுக்கு வீழ்ச்சியடைய வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3)


உள்ளூராட்சித் தேர்தலில்

உங்கள் சின்னம் நங்கூரம்



விளம்பர இலக்கம் (67651)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு: Lucky Farm Sales Centre, palaly Road, Thirunelvely.

(52156)

புறோயிலர் (Broiler) இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். தொடர்பு: இல. 101, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[52140]

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

[52131]

### தவறிவிட்டன

இரத்தினசாமி சுரேஸ்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், (இல. 763620905 V) விசேட அடையாள அட்டையும், கனான் ஜெப ஆலய அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கனான் ஜெப ஆலயம், இருபாலை, கோப்பாய் என்னும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [52127]

எமில்ஜேம்ஸ் ஜெறோம் ஜெவ்றி ஆகிய எனது விசேட அடையாள அட்டை புரட்டாதி மாதமும், தபால் அடையாள அட்டை இம்மாதம் 25 ஆம் திகதியும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்முகவரியில் ஒப்படைக்கவும். றெக்ஸ் ரெயிலரிங், 51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[52128]

### அறை வாடகைக்கு

யாழ். நகரில் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. முற்பணம் ஆயிரம். வாடகை300ரூபா.தொடர்பு; ந. விக்கினேஸ்வரன். ஆச்சாரி 426 302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

[52124]

### SPOKEN ENGLISH

சுலபமாக சிறு குறுப்பாக ஆங்கிலம் பேசப் பயிற்சி. (வேலை பார்ப்பவர்க்கு தனி வகுப்பு). ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

[52123]

### கல்வி

ஆங்கில இலக்கணம கட்டுரை கடிதம் எழுதுதல். ஸ்போக்கன் இங்கிலிஷ் யாவும் தபால் மூலம் பயிற்றப்படுகிறது. விவரங்களுக்கு முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்: G. M. J Joseph 76, Maha Veethiya, Negombo.

[51708]

### காணவில்லை

வெள்ளை நிறம் விரிந்த கொம்பு நெற்றியில் சாம்பல் நிறச்சுட்டியுள்ள கன்னிப் பசு மாட்டைக் காணவில்லை. தெரிந்தவர்கள் உமா களஞ்சியம். 260, காங்கேசன்துறை வீதி, சிவன் கோயில் முன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

[52146]

---

# வாழ்த்துகின்றோம்

## ந. சிவபாதம்
### "புத்தொளி" ஜே. பி.

சிவபாதம் என்னும் உயர் பெயர் படைத்த
சிந்தனைகள் உற்றெடுக்கும் சிந்தையானே
நவமான கதைகள், கட்டுரைகள், பாக்கள்
நயந்தெழுதும் முதியஎழுத் தாளா, யோக
தவசீலர் பேரறிஞர் திசழ்யாழ்ப் பாணச்
சமாதான நீதிவான் பதவி பூண்ட
திவமான ஆசிரிய மணியே, வாணி
திருவருளால் நின்பணிகதி பகம்போல் வாழி.

- அருட்கவி சீ. விநாசித்தம்பி -

அன்புடன்

லயன் டாக்டர் C. சுந்தரராஜன் குடும்பம்.

"கிருஷ்ணா",
நவாலி வடக்கு, மானிப்பாய். (52154)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 31 — 12 — 1947

உதிர்வு: 28 — 11 — 1997

## அமரர் நவரத்தினம் பூபாளராஜன்
(இளைப்பாறிய விமானப்படை அதிகாரி, சீனன்குடா - திருகோணமலை)

மானிப்பாய் லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை. 58 கஸ்டம்ஸ் வீதியை வசிப்பிடமாக கொண்டவரும் திருமதி யோகம்மா (வட்டு-கிழக்கு) வின் அன்புக் கணவருமான நவரத்தினம் பூபாலராஜன் 28—11—97 இல் திருகோணமலையில் சிவபதமடைந்தார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

நா. அம்பலவாணர்
(மைத்துனர்)

சங்கரத்தை—சந்தி,
வட்டுக்கோட்டை. (52116)

---

# 31 ஆம்நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



தோற்றம்: 22 — 1 — 1928

மறைவு: 28 — 11 — 1997

## க. கந்தையா
(புகையிரதப் பகுதி ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவினால் நாம் கலங்கி நின்ற போது பலவழிகளிலும் எமக்கு உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கடித மூலம் எமதுதுயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (28 - 12 - 97) அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியமும், சபிண்டீகரணமும் நடைபெறும். அனைவரும் கலந்து சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

- குடும்பத்தினர்.

634, கண்டி வீதி,
அரியாலை. [52118]

---

வெளிவந்து விட்டது!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த

# அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்

பரிசுத் தொகை ரூபா 15,000

விவரங்களை கலண்டரில் காண்க.

**விலை ரூபா 110**

## அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

இல. 41, கண்டி வீதி,
கைதடி. (51888)

---

# இதோ ஒரு முக்கிய அறிவித்தல்

01 01 . 1998 ஆம் திகதியிலிருந்து நுகர்வோரின் நலன்கருதி பால் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய:

| | |
|---|---|
| பால் 1 லீற்றர் கொள்விலை | ரூபா 17 |
| பால் 1 லீற்றர் விற்பனை விலை | ரூபா 20 |
| பால் 1 போத்தல் விற்பனை விலை | ரூபா 15 |
| தயிர் 1 லீற்றர் விற்பனை விலை | ரூபா 25 |
| ஆடை நீக்கிய பால் 1 லீற் விற்பனைவிலை | ரூபா 12 |
| ஆடை நீக்கிய பால் போத்தல் விற்பனைவிலை | ரூபா 09 |
| ஒரு கப் பால் | ரூபா 05 |

மேற் கண்ட விலை குறைப்பால் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இருந்தும் நுகர்வோரின் நலன் கருதி விலை குறைப்பு அவசியமாகிறது. இவ்விலை குறைப்பால் நுகர்வோர் பயன் அடைதல் மூலம் விற்பனை உயர்வடைந்து உற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் பாலை முழுமையாக உத்தரவாத விலையில் சந்தைப்படுத்தும் வாய்ப்பை எதிர்பார்க்கலாம். எனவே நுகர்வோர் ஆதரவு தந்து உதவவும்.

பொது முகாமையாளர்,

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

[சி/2485]

---

# ஆபத்தில் உதவிய அன்புள்ளங்களுக்கு நன்றிகள்

எழுவைதீவில் 18 - 12 - 97 இல் நிகழ்ந்த எதிர்பாராத குண்டு வெடிப்பின் போது படுகாயமடைந்த எமது குடும்பத்தினரை மிகுந்த சிரமத்தின் மத்தியில் வைத்தியசாலைக்கு அனுப்பி உதவிய எழுவைதீவுமக்களுக்கும், விசைப்படகினை வழங்கி உதவிபுரிந்த எழுவைதீவு - காரைநகர் கடற்படையினருக்கும், ஊர்காவற்றுறை வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், சத்திர சிகிச்சை நிலைய நிபுணர்கள், தாதிகள், ஊழியர்களுக்கும், மரணமடைந்த சகோதரியின் பூதவுடலை எடுத்துச் சென்று மரணக்கிரியை ஒழுங்குகளை மேற்கொண்டு கலந்து கொண்ட உறவினர்கள், ஊரவர்கள். நண்பர்களுக்கும், காயமடைந்தது முதல் இரத்ததானம், செய்திப்பரிமாற்றம், பிரயாண ஒழுங்குகள்வரை பலவழிகளாலும் உதவிகள் புரிந்த ஈ.பி.டி.பி கட்சியினரின் கௌரவ தலைவரும் பா. ம. உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும், இத்துயரச் செய்தியினைக் கேள்வியுற்றதும் பல வழிகளாலும் உதவிகள் புரிந்த கே. எஸ். என்ரபிறைசஸ் கொழும்பு நிறுவன உரிமையாளர், ஊழியர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் தொடர்பு கொண்டு ஆறுதல் அனுதாபங்கள் வழங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினரின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றியுடன்:

நடராஜா பரமசிவம் (குமார்) (மகன்)

நடராஜா, ரவிச்சந்திரன் [மகன்]

எழுவைதீவு - 2

(52126)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது 2 ஆம் வருட வர்த்தகத்துறை மாணவியான

இ. ஜீவராணியின் தந்தையான

## இராசையா

அவர்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

2 ஆம் வருடம் (B பிரிவு)
கலைப்பீடம்.
யாழ் பல்கலைக்கழகம்.

(52139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு என்பது வன்னியில் பெரிய காரியம்

## நோய்களும் போக்குவரத்துச் சிரமமும் வழமை நிலைகள் ஆகிவிட்டன

வி. ரி. கதிர்காமநாதன்

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையும், தற்போது பெய்து கொண்டிருக்கும் அடைமழையும் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்க்கையை மிக மோசமாக்கியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் சுமார் 1 லட்சத்து 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 4லட்சத்து 85 ஆயிரம் பேர் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களில் சுமார் 75 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3 லட்சம் பேர் இடம் பெயர்ந்தவர்கள். இடம்பெயர்ந்த மக்களில் அதிகமானோர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இரண்டு பிரிவுகளாக 'வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை மூலம் முன்னேறியுள்ள படையினர் ஒலுமடு, கரிப்பட்ட முறிப்பு ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ளார்கள். படையினர் தாம் நிலைகொண்டுள்ள இடங்களில் தமது பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதிலேயே தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பகுதிகளில் இருந்து முன்னரங்கப் பகுதிகளை நோக்கி பீரங்கிப்படையினர் கடுமையான ஷெல் பீரங்கித்தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். விமானப்படையினர் இராணுவத்தினர் முன்னேறுவதற்கு எண்ணியுள்ள பகுதிகளை நோக்கி கடும் வான்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கிளிநொச்சிப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரும் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

இராணுவத்தினர் தாம் நிலை கொண்டுள்ள பகுதிகளின் நெருங்கிய இடங்களுக்கு மட்டுமல்லாமல் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கியும் கண்டபடி ஷெல், பீரங்கி விமானத் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். ஆனால் புலிகளின் நடமாட்டங்களைக் கண்ட பின்புதான் மேற்படி தாக்குதல்களை மேற்கொள்வதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான நேரடிமோதல் தவிர்ந்த ஏனைய இராணுவ நடவடிக்கைகளினால் வன்னிப் பிரதேச பொதுமக்களின் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவிட்டது.

### கட்டுப்படுத்தப்பட்ட தொடர்பு

முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, விசுவமடு போன்ற இடங்களில் வசிக்கும் மக்களுக்கும் இராணுவக்கட்டுப்பாடற்ற கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுவதுடன் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தினாலும் கொட்டும் மழையினாலும் பொது மக்களின் போக்குவரத்தும், உணவு விநியோகச் செயற்பாடுகளும் முற்றாகச் சீரழிந்துள்ளன. இடைவிடாது பெய்து கொண்டிருக்கும் அடைமழையினால் வன்னிப் பிரதேசத்திலுள்ள குளங்கள் யாவும் நிறைந்து தண்ணீர் வான்பாய விடப்பட்டுள்ளன. மிதமிஞ்சிய தண்ணீர் வீதிகள், பாதைகள், வயல் காணிகளில் ஓடி வடிகால்களினூடாகக் கடலை நோக்கிச் சென்றடைகின்றது. இந்த நிலைமையில் நெற்செய்கையும் மக்களின் போக்குவரத்தும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களில் மிகப் பெரிய குளம் இரணைமடுக்குளம் ஆகும். இந்தக்குளம் நிரம்பிவழிகின்றது. இதனால் இந்தக்குளத்தின் நீர் தற்போது திறந்து விடப்பட்டுள்ளது. தற்போதைய யுத்த நிலைமையினால் இராணுவக்கட்டுப்பாடற்ற கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருபகுதியான துணுக்காய், மல்லாவி, ஐயன்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களும் இராமநாதபுரம், தருமபுரம், விசுவமடு, முள்ளியவளை, தண்ணீரூற்று போன்ற இடங்களுக்குச் செல்வதற்குரிய பிரதான பாதையாக இரணைமடுக்குளத்தின் அணைக் கட்டுப் பாதையையே பயன்படுத்துகின்றனர்.

இரணைமடுக் குளத்தின் நீர் முற்றாகத் திறந்துவிடப்படுமானால் இப்பாதையினூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு விடும்.

தற்போது கூட வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. தண்ணீர் பாய்கின்ற பகுதியை மக்கள் மூடை முடிச்சுக்களை தலையில் சுமந்தவாறு கால் நடையாகக் கடந்து செல்கின்றனர். வாகனங்கள் இரண்டு பகுதிகளில் இருந்து மக்களையும், பொருள்களையும் ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

### நிவாரணம் ஒழுங்கில்லை

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் சித்திரை மாதத்துக்குப் பின்னர் ஒழுங்காக விநியோகிக்கப்படவில்லை. இடையிடையே நிவாரணம் விநியோகிக்கப்படுகின்றது.

சித்திரை மாதத்தில் இருந்து கார்த்திகை மாதம் வரையிலான காலப்பகுதியில் பத்துவாரங்களுக்கான நிவாரணமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பட்டினிச்சாவையே எதிர்நோக்கியுள்ளனர். தொழில் இன்றி, வருமானம் இன்றித் தவிக்கும் இந்த மக்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை கூட சாப்பிட முடியாமல் அவதிப்படுகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் நிலைமை மிக மோசமான நிலையில் உள்ளது. சிறு குடிசைகளாக அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களின் முன்னால் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் மண் சுவர்கள் இடிந்து விழும் அபாய நிலைமை தோன்றியுள்ளது. மலசல கூடங்கள் இல்லாமையினால் வெட்ட வெளியில் காடுகளில் மலசலம் கழித்து வந்த மக்கள் சுகாதாரச் சீர்கேட்டினால் தொற்றுநோய்களுக்கு ஆளாகியுள்ளனர். நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. மலேரியா, நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், சொறி சிரங்கு ஆகிய நோய்களினால் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### நோய்கள் பரவுகின்றன

அக்கராயன், மல்லாவி, முழங்காவில், வேரவில், முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முள்ளியவளை வைத்தியசாலையில் மட்டும் கார்த்திகை மாதம் மட்டும் சுமார் 7 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. மலேரியாவுக்கு 193 பேரும் வயிற்றோட்டத்துக்கு 425 பேரும் சொறி சிரங்கிற்கு 650பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சகல வைத்தியசாலைகளிலும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தங்கியிருந்து சிகிச்சைபெறும் வைத்தியசாலைகளில் பெரும் இடநெருக்கடி நிலவுகின்றது. பாதை ஓரங்களில் பாய்களில் படுத்துறங்கி பெரும் எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை சகல வைத்தியசாலைகளிலும் வைத்திய அதிகாரிகளில் இருந்து பல தரப்பட்ட ஊழியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் நோயாளர்கள் சில சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகளுக்குச் சென்று வைத்தியர்கள் இல்லாமையினால் சிகிச்சை பெறாமல் திரும்பிச் சென்ற சம்பவங்களும் உண்டு.

மருந்துகள் இல்லாமையினால் வைத்திய அதிகாரிகள் தனியார் மருந்தகங்களில் மருந்தை வாங்கும்படி துண்டு எழுதிக் கொடுக்கின்றனர். ஒரு நாளைக்கு ஒரு வேளை கூட சாப்பாட்டுக்கு திண்டாடும் மக்கள் மருந்து வகைகளை வாங்குவதற்கு பணத்திற்கு எங்கே போவார்கள்? தனியார் மருந்தகங்களில் மருந்துகள் பல மடங்கு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. நெருப்புக் காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களின் மருந்து வில்லைகளின் விலை நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் பல ஏழை மக்கள் மருந்துகளை வாங்கமுடியாமல் மரணமடைந்த சம்பவங்களும் உண்டு.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மரக்கறிகள், எரிபொருள்கள் ஆகியவற்றின் விலைகள் நாளுக்குநாள் விஷம் போல ஏறுகின்றன. அரிசி ஒரு கிலோ 40 ரூபா, மீன் ஒரு கிலோ 140 ரூபா, தேங்காய் ஒன்றின் விலை 25 ரூபா, மண்எண்ணெய் ஒரு போத்தல் 140 ரூபா, தேங்காய் எண்ணெய் ஒரு போத்தல் 140 ரூபா என்று விற்பனை செய்யப்படுகின்றன. மிளகு, பூடு போன்ற மருந்துக்குப் பாவிக்கும் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

### பாடசாலை செல்வதில்லை

பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் இல்லாமையினாலும் பட்டினியாலும் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. நூற்றுக்கணக்கானோர் தெருக்களில் பிச்சை எடுக்கின்றனர். நூற்றுக்கணக்கானோர் தேநீர்க்கடைகள் மற்றும் வியாபார நிலையங்களில் கூலியாட்களாக வேலை செய்கின்றனர் நூற்றுக்கணக்கானோர் காடுகளுக்குச் சென்று விறகுகளை வெட்டி தலையில் சுமந்து சென்று விறகுவியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சிறுவர்களின் எதிர்காலம் இருண்ட காலமாகவே இருக்கப் போகிறது.

சூரியக்கதிர் ஒன்று இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து, வந்த மக்கள் வன்னியில் தங்கியிருந்து இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்தாலும், மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களால் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டதனாலும் வன்னியில் இருந்து மீண்டும் யாழ். மாவட்டம் செல்வதற்கே பெரும்பாலும் விரும்புகின்றனர். ஆனால் போக்குவரத்து வசதியீனம் காரணமாகவே இன்றும் வன்னியில் வாழ்ந்துகொண்டு அல்லற்படுகின்றனர்.

மன்னார், திருகோணமலை வழியாக கப்பல் மூலம் யாழ்ப்பாணம் திரும்புவதில் உள்ள சிரமங்கள் எழுத்தில் அடங்காது. கப்பல் சேவை ஒழுங்காக நடைபெறுவதில்லை. இதனால் இவர்கள் இப்போது பயண முயற்சியைப்பற்றிச் சிந்திக்காமல் உள்ளனர்.

### போக்குவரத்து வசதி இல்லை

வன்னியில் இன்று அவதியுறும் யாழ். மாவட்ட மக்களில் அரசாங்கம் உண்மையில் அக்கறை காட்டுவதாயின் பூநகரி, சுண்டிக்குளம் கடல் வழியாக திரும்பவும் யாழ் மாவட்டத்துக்கு செல்லும் வாய்ப்பை அளிப்பது பற்றி ஏன் சிந்திக்காமல் இருக்கின்றது என்ற கேள்வியை வன்னியில் தங்கியுள்ள மக்களில் பலரும் எழுப்புகின்றனர்.

அரசாங்கம் இன்றைய வன்னி மக்களின் பரிதாப நிலைமையை எண்ணி சாத்தியமான முடிவொன்றை எடுக்குமாயின் கூடுதலான மக்கள் யாழ். மாவட்டத்துக்கு சென்றுவிடுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையும், அடைமழையும், பட்டினிச்சாவும் வாட்டிக்கொண்டிருந்தும் வன்னியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற லட்சக்கணக்கான மக்களின் பரிதாப நிலைமைக்கு எப்போது முடிவு ஏற்படும் என்பதை இன்றைய நிலையில் எவராலும் திட்டவட்டமாகக் கூறமுடியாமல் இருக்கின்றது. ★

## நல்லூர் பகுதி மின் பாவனையாளருக்கு

யாழ்ப்பாணம், டிச 28

நல்லூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் பெறுபவர்களுக்கு நாளை திங்கட்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு ஒருதடவையே மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி மின்பிறப்பாக்கியின் வலு கூடியுள்ளதால் இந் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (இ 3)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிச. 28

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 00 மணிக்கு ஆலய பங்குத்தந்தை அருட்திரு சாள்ஸ் கொலின் தலைமையில் ஆலய மைதானத்தில் நடைபெறும்.

கௌரவ விருந்தினராக அருட்திரு. றெஜி ராஜேஸ்வரன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக அருட்திரு எட்வின் வசந்தராஜா அடிகளாரும் கலந்து கொள்வார்கள். (உ–30)

★ ★ ★

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் நத்தார் ஒளிவிழா நிகழ்ச்சி நாளை திங்கட்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை கோண்டாவில் சாலையில் நடைபெறும். திருப்பலிப் பூசையுடன் விழா ஆரம்பமாகிப், பேச்சு, அருளுரை, கிறிஸ்மஸ் கானங்கள், நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ)

தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கைக் கூறுபோடும் முயற்சிகளை எதிர்த்து நிற்கவும், தாயகப் பாதுகாப்புக்காக போராடும் நம் கரங்களை வலுப்படுத்தவும் ஈ. பி. டி. பிக்கு வாக்களிப்பீர்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) X

(ஏ-003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பொதுநூலகத்தை சீரமைக்க பொது மக்களின் உதவி தேவை

## ஒத்துழைப்புக் கோருகிறார் வடக்குத் தளபதி பலகல்ல

யாழ்ப்பாணம், டிச .28

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கும் புத்துயிர் அளிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரி பாதுகாப்புப் படைகளின் வடக்குத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பி. பலகல்ல அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

நீண்டகாலமாக சேதமுற்று செயலிழந்து இருக்கின்ற யாழ். பொது நூலகத்திற்கு புத்துயிர் கொடுக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி விசேட அக்கறை கொண்டுள்ளார்.

அழிந்த கட்டடத்துக்குப் பதிலாக புதிய கட்டடத்தை உருவாக்குவதில் ஏற்படக் கூடிய காலதாமதத்தை கருத்திற் கொண்டு இப்போதைக்கு தற்காலிகமாக யாழ். நகரில் இந்த நூலகத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வெளிநாட்டு உதவிகளும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இச்செயற்பாடு சிறப்பான முறையில் வெற்றியளிப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்வதுடன் இந் நல்ல பணிக்கு நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் தாம் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நூல்களின் பட்டியலை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நூற்பட்டியல் தகுதி வாய்ந்த குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்என்பதைத்தயவுடன்தெரியப்படுத்துகிறேன்.

நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் பின்வரும் விவரங்களையும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அ. நூல் பட்டியலின் பெயர்.

ஆ. பதிப்பாசிரியரின் பெயர்.

இ. நூல்வெளியிடுபவரின் பெயர்.

எல்லோரினதும் சுபீட்சத்துக்காக ஒத்துழைத்து செயற்படுவோமாக!- என்று தெரிவித்துள்ளார். (உ-9)


## நிறுவன உதவியாளர் தேவை

கொக்குவிலில் ஆரம்பமாக உள்ள எமது நிறுவனத்திற்கு உடனடியாக நிர்வாக உதவியாளர் தேவை. கொக்குவில் பகுதியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. உடன் நேரில் வருகை தரவும். (இருபாலாரும்)

தொடர்பு முகவரி:

எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)

K. K. S. றோட், யாழ்ப்பாணம்.

(52161)



மாணவ உலகின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியர் குழுவுடன்

## A|L 2000

கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்:- ஜனவரி 10 -10மணி [சனி]

| | |
|---|---|
| கணக்கீடு | - D. SAM |
| பொருளியல் | - R. இராஜேஸ்வரன் |
| வணிகக்கல்வி | - B பசில் |
| வணிகப்புள்ளி | - T. தவசேகர் |
| அளவையியல் | - T. மோகன் |
| தமிழ் | - A. மீரா |
| கிறிஸ்தவம் | - A. மலிகா |
| நாடகமும் அரங்கியலும் | - M. சந்திரன் |
| புவியியல் | - M. இக்னேசியஸ் |
| இந்துசமயம் | - S. சுரேஸ் |
| அரசியல் | - S. பஞ்சாட்சரம் |
| இந்துநாகரிகம் | - P. ஜோதீஸ்வரன் |

கலை 8 மணி [ப. நே ]

வர்த்தகம் 10 மணி [ப. நே ]

அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

D. M. I.


233, STANLEY ROAD,

JAFFNA.

D. SAM

(சி/2491)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 01 — 1923

உதிர்வு: 08 — 01 — 1997

### அமரர் பொன்னையா நவரத்தினசிங்கம்

(உரிமையாளர் யாழ்தேவி ரான்ஸ் போட் சேவிஸ்)

திதி: 28 - 12 - 97

எங்கள் குடும்பத் தலைவனாய், அன்பின் திருவுருவாய் வாழ்ந்து, எங்களுக்கு வாழ்வளித்த வழிகாட்டியே!, எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து, எங்கள் நினைவுடனே இயற்கை எய்திய நீங்கள் எமை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று போயினும், உங்கள் திருவுருவம், பாசம், நினைவுகள் என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், உறவினர்கள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு.

[52158]

## பச்சை மிளகாய் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் பச்சை மிளகாயின் விலை அதிகரித்துள்ளது.

சந்தைகளில் ஒரு கிலோ பச்சை மிளகாயை சுமார் இரு நூறு ரூபா முதல் இரு நூற்றியைம்பது ரூபா வரை விலையில் விற்கப்படுகின்றன. (உ-17)


## அஸ்மா வைத்தியர்

பென்ரகொஸ்ரல் சபைக்கு முன்னால் இருந்த அஸ்மா வைத்தியர் மீண்டும் வந்துள்ளார். நோயாளிகள் புதன்கிழமையைத் தவிர ஏனைய நாள்களில் சந்திக்கலாம்.

வே- முருகையா
ஆயுள்வேத வைத்தியர்
92 A, கண்டி வீதி,
சுண்டுக்குளி.

(52149)



## மீன்தூள் விற்பனைக்கு

எமது சங்கத்தில் பழுதடைந்த மீன்தூள் விற்பனைக்குண்டு இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் எமது களஞ்சியத்தில் மீன் தூளைப் பார்வையிட்டு 15-01-98 நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட
அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
[illegible]

[illegible]


கொழும்பு பொலீஸாருக்கு

## 25குதிரைகள் வாங்க 2 கோடி ரூபா செலவு!

கொழும்பு, டிச. 28

கொழும்பு நகர் போக்குவரத்துப் பொலீஸாருக்கென பிரான்சில் இருந்து 25 குதிரைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இந்தக் குதிரைகள் ஒவ்வொன்றின் விலை 8 லட்ச ரூபாவாகும். இதன்படி 25 குதிரைகளையும் கொள்வனவு செய்ய இரண்டுகோடி ரூபா செலவிடப்படவிருக்கின்றது.

ஏற்கனவே பொலீஸாரிடம் உள்ள குதிரைகளுக்காக வெளிநாட்டில்இருந்துஇறக்குமதி செய்யப்பட்ட 800 மூடை குதிரை உணவு பழுதடைந்துள்ளதாகவும் –

அவற்றின் விலை பல லட்சங்களாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

## மணிவிழா இன்று

யாழ்ப்பாணம், டிச .28

இணுவையூர் தர்மசாஸ்தா குரு குல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் தம்பதியரின் ஷஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் மணிவிழா நிகழ்ச்சிகள் இன்று காலை 9மணி முதல் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்துமதகுருமார்ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர் பிரதம விருந்தினராகவும், யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இவ் விழாவில் மணிவிழாத் தம்பதிகள் பொன்னாடை போர்த்து தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப் படுவர், பாராட்டுரைகளை சிவஸ்ரீ சி சிதம்பரநாதக் குருக்கள், சிவஸ்ரீ மனோகரக்குருக்கள் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர்

இணுவையூர் கலாபூஷணம் ந. வீரமணி ஐயர் மணிவிழாத்தம்பதியரைபாராட்டி பாராட்டுப்பத்திரம் வாசித்து வழங்கிக் கௌரவிப்பார். பிராமண இளைஞர் சமாஜத்தினரும் விழாத் தம்பதிகளை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பர்.

(அ-7)

## குஜ்ரால்....

(மூன்றாம் பக்கத்தொடர்)

கட்சியின் துணைத் தலைவர் கே. எல். சர்மா தெரிவித்தார்.

பாரதிய ஜனதாவுக்கு அகாலி தளத்துடன் உள்ள கூட்டு இதற்கு ஒரு தடையாக அமையாது என்று அவர் செய்தியாளர்களிடம் சொன்னார்.

இதற்கிடையில் —

குஜ்ரால் போட்டியிடும் தொகுதி குறித்து கட்சி இன்னமும் முடிவு செய்யவில்லை என்று அவரது கட்சியான ஜனதா தளத்தின் பொதுச் செயலர் பாபு கல்தாதே டில்லியில் தெரிவித்தார்.

குஜ்ரால் விரும்பினால் பிஹாரின் எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் அவரை நிறுத்தத் தயார் என்று ராஷ்ட்ரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ்கூறியிருக்கிறார்.

(உ)


## கொக்குவில் லயன்ஸ் கழக அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

இன்று (28—12—1997) இல் நடைபெறவிருந்த மேற்படி அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 07 02—1998 இல் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

லயன் செ. ந. விஸ்வலிங்கம்

(49891) லயன்ஸ் கழகம், கொக்குவில்.


## SECOND DEATH ANNIVERSARY



BORN: 09 — 07 — 1929

DIED: 28 — 12 — 1995

IN EVER LOVING MEMORY OF

### A. R. RAJOO

( Rtd. Asst. Commissioner of Excise, N. D. )

Loved with a Love beyond all tellings,
Missed with a grief beyond all tears,
God takes the best for reasons divine,
But Memories last till the end of time.

Remembered by his Wife, Children,
in Laws & Grand Children.

Rohan Rojoo,
No. 43, Kachchai Road,
Chavakachcheri.

(52164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுங்க மோசடி விவகாரம் தொடர்பான

# இரகசிய அறிக்கை ஐ.தே.கவிடம்!

கொழும்பு, டிச. 28

எயர் லங்கா நிறுவனத்தின் தலைவர் ஹரி ஜயவர்த்தனவுக்குச் சொந்தமான ஸ்டசன்ஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பெரும் சுங்க மோசடி தொடர்பாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் எஸ். எம். ஜி. சேனாரத்னாவினால் நிதி அமைச்சின் செயலாளர் பி. சி. பெரேரா ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட இரகசிய அறிக்கை ஐ. தே. கட்சியின் செயலாளர் காமினி அத்துகோறளவின் கைக்கு எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரகசிய அறிக்கை குறித்து ஐ. தே. கட்சியினர் ஆராய்ந்தாதகவும்—

அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் அவர்கள் சமர்ப்பிக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹரி ஜயவர்த்தனாவுக்குச் சொந்தமான நிறுவனம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்ட கோடிக்கணக்கான பொருள்களின் பெறுமதியை மிகக் குறைந்தளவில் காட்டி சுங்கத் திணைக்களத்தை ஏமாற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து குறித்த நிறுவனத்தின் பணிமனைக்குச் சென்ற சுங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் கைப்பற்றியதுடன் ஹரி ஜயவர்த்தனவையும் கைது செய்ய முயற்சித்தனர். இருப்பினும் மேலிடத்து அழுத்தங்கள் காரணமாக சுங்க அதிகாரிகளால் அந்நடவடிக்கையை மேற்கொள்ளமுடியவில்லை.

சுங்கப் பரிசோதனைகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக மேலிடத்தின் பணிப்பின் பேரில் தற்போது தனித்தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)


## விற்பனைக்கு

ஹொண்டா 90 மோட்டார் சைக்கிள், றேடியோ, ஜெனரேற்றர், கலர் ரெலிவிஷன், சைக்கிள்கள் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- டாக்டர் மு. தேவமதுரம்
569, பீச்றோட், குருநகர்,
யாழ்ப்பாணம்.

(52090)

## MODERN EDUCATION CENTRE
NELLIADY, KARAVEDDY.

## A\L 2000

கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 01-01-1998
வியாழன் பி. ப. 3.00

★ எமது வழமையான ஆசிரியர் குழு

## SCIENCE CENTRE
NELLIADY, KARAVEDDY.

## A\L 2000

கணித உயிரியல் வகுப்புக்கள்

ஆரம்பம்: 01-01-1998
வியாழன் பி. ப. 3.00

| | |
|---|---|
| பௌதிகவியல் — | திரு. குமரன் |
| இரசாயனவியல் — | திரு. வசிகரன்<br>திரு. சிவத்திரன் |
| தூய / பிரயோக கணிதம் — | திரு. வெக்ரர் வேலாயுதம்<br>திரு. குழுக்கேசன் |
| விலங்கியல் — | திரு. கெங்காதரன் |
| தாவரவியல் — | பிரபல ஆசிரியர் |

★ அனுமதிகளை முன்னரே பெற்றுக்கொள்ளலாம்.

- நிர்வாகி

(சி/ 2487)

## வீடு விற்பனைக்கு

இல. 92A,
கண்டி வீதி,
சுண்டுக்குளியில்

உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. அதே வீட்டில் வசிக்கும் உரிமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வே. முருகையா

(52148)

## மனையியல் பயிற்சி

★ தையல், ★ கேக் ஐசிங்,
★ மாச்சினி மலர் அலங்காரம்
★ சமையற் கலை ★ சிகை அலங்காரம்,
★ பூ வேலை ★ பப்ரிக்பெயின்ரிங்

ஆகியவற்றுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு

**VAKEE,**

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(52089)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி நாகரத்தினம் செல்வநாயகம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சாந்தினி கனகநாயகத்தின் அன்புத் தாயாரின் மறைவையொட்டி எமது பாடசாலை ஆசிரியர்களின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயம்.

(49888)

## கல்வித்திணைக்களம் வலயம் ஒன்றின் நலன்புரிக்கழகம் நடத்தும்

# ஒளிவிழா

இடம்: யா/திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

காலம்: 29 - 12 - 1997 திங்கட்கிழமை
முற்பகல் 9.30 மணி (புதியநேரம்)

தலைவர்: திரு செல்லையா மெற்றாஸ்மயில்

பிரதம விருந்தினர்: உயர்திரு சு. இரத்தினராசா
[கல்விப் பணிப்பாளர் வலயம் 1 கல்வித்திணைக்களம்]

சிறப்பு விருந்தினர்கள்:

அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம்
(சவேரியர்-குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

அருட்தந்தை ஸி. ஆனந்தகுமார்
(உதவிப் பங்குத் தந்தை, யாழ். பேராலயம்)

அருட்செல்வி யோலண்ட்
(அதிபர், திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.)

### ★ விழா நிகழ்வுகள் ★

9.30 — ஒளியேற்றல்
9.35 — வரவேற்புரை
9.40 — கிறிஸ்தவ கீதங்கள் - அருட்செல்விகள்
9.45 — கிறிஸ்மஸ் நற்செய்தி-சிறப்பு விருந்தினர்.
9 55 — Happy Birthday to you - நடனம்
மாணவிகள், திருக்குடும்பக் கன்னியர்மடம்
10.05 — கிறிஸ்தவ கீதங்கள் - கிறிஸ்தவ அதிபர்கள்
10.15 — 'மவுண் ஓகண்ட்' பாடல்
திரு. சி தேவராசா
10.20 — கிறிஸ்தவ கீதங்கள் - ஆசிரியர்கள்
10.25 — சிறுவர் நடனம்
யா/புனித மரியாள் வித்தியாலயம்
10.35 — கிறிஸ்தவ கீதங்கள் -
காரியாலய உத்தியோகத்தர்கள்
10.40 — கிறிஸ்மஸ் நற்செய்தி - சிறப்பு விருந்தினர்
10.50 — கைக்குட்டை நடனம் -
புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
11.00 — யேசு கீதங்கள் இசைக்குழுவினர்
12.00 — தலைவர் உரை
12.05 — பிரதம விருந்தினர் உரை
12.15 — நாட்டுக் கூத்து
யா/புனித றோக்கஸ் மாணவர்கள் வழங்கும்
"மனு உருவான திரு"
12 40 — நன்றியுரை

நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
கல்வித் திணைக்களம் வலயம் I


நிகழ்ச்சி சிறப்புற எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் எமது புத்தாண்டு வாழ்த்துக்களையும், தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ராசி பட்டுச் சோலை

இல. 70, 71A நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-2475)

# BASF

## விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

# லாவின்

★ மிளகாய் ★ கௌபி ★ போஞ்சி போன்ற பயிர்களில் காய்துளை -புழுக்களைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட கிருமி நாசனி.

பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சி புழுக்களைத் தாக்கும் தன்மை குறைவானது.

புத்தம் புதிய

## பின்கெம் லாவின் பி. எ. எஸ். எ(F)வ்

நிறுவனத்தினால்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## உழவர் களஞ்சியம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

## கமக்காரர் மாளிகை

பிரதான வீதி, சுன்னாகம்.

**BASF - Finlay (Pvt.) Ltd.,**
186, Vauxhall Street, Colombo - 2.

(பீடை கொல்லிகள் அபாயகரமானவை [illegible] பாவியுங்கள்)

(இ/2366)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடத்தும் அரசின் முயற்சியை நியாயப்படுத்தும் தமிழ்க்கட்சிகள்

### கடுமையாகச் சாடுகின்றார் குமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், டிச. 28

தற்போது கனடாவில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, அங்கு பல கூட்டங்களில் உரையாற்றி வரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம், தற்போது யாழ். குடாநாட்டில் நடைபெற ஏற்பாடாகியிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அவர் கூறியதாவது;-

''இப்படி ஒரு தேர்தல் இன்று தேவைதானா? வடபகுதியில் இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையில் சுதந்திரமான நியாயமான தேர்தல்கள் அங்கு நிலவுமென நான் நம்பவில்லை.

தேர்தல் இடாப்புகள் பழைமையானவையே. இவை ஜனநாயகத்தை பிரதிபலிக்கும் என்று நான் நினைக்கவில்லை.

அந்த வகையில் இடாப்புக்கள் முற்றிலும் பெறுமதியற்றவையாகுகின்றன.

முனைப்புடன் தேர்தலில் பங்குபற்றும் கட்சிகளும், அமைப்புக்களும் அரசை ஆதரிப்பனவே. அத்துடன் அரசின் கட்டளைகளை ஏற்றொழுகுபவையும் கூட.

ஏனென்றால் அவற்றில் சில அரசிடம் கூலி பெறுபவை.

இதனால்தான் இத்தேர்தலில் பங்கு பற்றுவதன் மூலம் அரசு இத்தேர்தலை நடத்துவதற்கான காரணங்களை நியாயப்படுத்தும் பணியை அவை மேற்கொள்கின்றன. அரசின் கட்டளைக்கு கட்டுப்பட்டாக வேண்டியவர்களாதலால் அவர்களுக்கு மாற்றுவழி கிடையாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சூழ்நிலை அறிவிப்பும், தேர்தலை ஒத்திவைக்கக் கோரியதுமான நிலைப்பாடு முற்றிலும் சுத்த விசுவாசமற்ற போலித்தனம்.

அப்படியானால் தேர்தலில் கூட்டணி ஏன் ஆவல கொள்ள வேண்டும்? அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்தி தமிழினத்தை ஏமாற்றும் செயலே இதுவாகும் — என்று தெரிவித்துள்ளார் குமார்பொன்னம்பலம்.

(உ-8)

## யாழ். ப. நோ. கூ. ச. கிளைகள் இன்று திறந்திருக்கும்

அரியாலை டிச. 28

புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளைகள் யாவும் விடுமுறை நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் திறந்திருக்கும் என்று சங்கத்தின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தில் 51 ஆவது ஏ.பீ. ஆகிய முத்திரை புள்ளிகளுக்கான உணவுப் பொருள்களையும் புதுவருட தினத்திற்கு முன்னர் விநியோகித்து விடவேண்டும் எனவும் சங்கத் தலைவர் சகல கிளை முகாமையாளர்களையும் கேட்டுள்ளார்.

(உ-17)

## சாயி சமித்தியில் அகண்ட பஜனை

யாழ்ப்பாணம், டிச 28

சாயி நிறுவனங்கள் இணைந்து நடத்தும் அகண்ட பஜனை இன்று காலை 7 மணிமுதல் மாலை 5 மணி வரை சேர் பொன். இராமநாதன் வீதியில் உள்ள சாயி சேவா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 40 சாயி நிறுவனங்களின் உறுப்பினர்கள் இந்த பஜனையில் ஒன்றுகூடவுள்ளனர்.

(ஐ)

## மந்துவில், சரசாலை, வரணியில் காட்டுப் பன்றிகளால் நெற்பயிர்கள் அழிப்பு

### விவசாயிகள் முறைப்பாடு

கடந்த வாரம் காட்டுப் பன்றிகள் இரவுவேளைகளில் கூட்டம் கூட்டமாக வந்து தங்கள் நெற்பயிர்களை அழித்து வருவதாக சாவகச்சேரி கமநல சேவை கேந்திர நிலைய பகுதியை சேர்ந்த மந்துவில், சரசாலை, வரணி ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

பன்றிகள் இப் பகுதிகளிலுள்ள நெல் வயல்களுக்குள் புகுந்து மிகவும் பிஞ்சு நிலையிலுள்ள — இப்போது தான் கதிராயுள்ள — நெற்பயிர்களை தின்று அழித்து விட்டதாகவும் —

இதனைத் தடுப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும்—

இப் பகுதி விவசாய சம்மேளனம் சாவகச்சேரி கமநலச் சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருக்கு கடிதமூலம் வேண்டுகோள்விடுத்துள்ளன.

பன்றிகள் இனி முற்றிய நிலையிலுள்ள நெற்கதிர்களையும் தின்று அழித்துவிடக் கூடிய ஆபத்து இருப்பதாகவும் -

இவற்றைச் சுடுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் — மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கமநலச் சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் இதனை யாழ் கமநலச் சேவைகள் இணைக்கள உதவி ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

## வழுக்கையாறு அபிவிருத்திக்கு நோர்வே உதவியளிக்கும்

### தூதுவர் நேரில் பார்வையிட்டார்

சண்டிலிப்பாய், டிச. 28

அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த நோர்வே நாட்டு தூதுவர் கசப்போ குளோரிலுடன் அராலியில் உள்ள வழுக்கை ஆற்றின் தடுப்பு அணையையும், அங்குள்ள மதகு வாய்க்கால்களையும், சண்டிலிப்பாயில் வழுக்கை ஆறு செல்லும் ஐந்து கண் மதகையும் நேரில் சென்று பார்வையிட்டார். யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், யாழ். நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர், சங்கானை பிரதேச செயலர், யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் ஆகியோரும் அவருடன் சென்று பார்வையிட்டனர்.

வழுக்கை ஆறு அபிவிருத்தி திட்டத்திற்கு நோர்வே நாடும் பங்களிப்பு செய்யுமென எதிர்பார்க்கப்படுவதாக உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

(உ-135)

# 11 ஆயிரத்து 462 மாணவருக்கு இம்முறை பல்கலைக்கழக அனுமதி

### யாழ். பல்கலைக்கு ஆயிரத்து 175 பேர்

கொழும்பு. டிச. 28

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றியவர்களில் 11ஆயிரத்து462 மாணவர்கள் 97 – 98 கல்வியாண்டுக்கு பதினொரு பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதிக்கப்படவிருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இவ்வாண்டு ஆயிரத்து 175 மாணவர்கள் அனுமதி பெறுகிறார்கள்.

ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை வருமாறு ;-

- ★ கொழும்பு — 1,380.
- ★ பேராதனை — 1,765.
- ★ ஸ்ரீ ஜெயவர்த்தனபுர— 1,615
- ★ களனி — 1, 240.
- ★ றுகுனு — 1,157.
- ★ மொறட்டுவை — 570.
- ★ கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் — 450.
- ★ தென் கிழக்கு பல்கலைக்கழகம் — 350.
- ★ ரஜரட்ட — 535
- ★ சப்ரகமுவ பல்கலைக்கழகம் — 460.

(உ-10-3)

## 800 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, டிச. 27

நத்தாரை ஒட்டி 800 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்துள்ளார் நீதிமன்றங்களால் மரணதண்டனை வழங்கப்பட்ட 10 கைதிகளுக்கு அவர்களது தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-10)

## அரியாலை தேவைகள் குறித்து ஆராய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 28

அரியாலைப் பிரதேச அபிவிருத்தி தேவைகள் கணிப்பு, புள்ளிவிவரங்கள், தகவல்கள் திரட்டல் ஆகியவை தொடர்பாக அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி புதன் கிழமை, காலை 9.15 -க்கு ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சட்டத்தரணியும் மரணவிசாரணை அதிகாரியுமான க. கேசவன், யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், மூளாய் முன்பள்ளி கல்வி நிறுவனப் பணிப்பாளர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் போன்றோர் கருத்துரை வழங்குவார்கள்.

(உ-8)

# உலகை உய்விக்க வந்த இறைமகன் இயேசு

## அமைதிக்கு ஆசான்; அன்புக்கு அரசன்

பல்வேறு விதமான வணக்கங்களுக்கும் அச்சங்கலந்த எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் தான் கிறிஸ்துவின் பிறப்பு அன்று நிகழ்ந்தது. இந்நிலையில் அவரின் பிறப்பிற்கு முன்னும் பின்னும் நடந்தேறிய நிகழ்வுகளை உள்வாங்க நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

அகஸ்துஸ் சீசர் எனப்பட்ட றோமைச் சக்கரவர்த்தியிடமிருந்து உலக மக்கள் கணக்கெடுப்பிற்கு உதவியாக எல்லோரும் தத்தமது சொந்த ஊருக்குச் செல்ல வேண்டுமென ஆஞ்ஞை பிறந்தது. கலிலேயாவிலுள்ள நசரேத்தில் வாழ்ந்து வந்த சூசையும், தன் சொந்த ஊராகிய யூதேயாவிலுள்ள பெத்லெஹேமிற்கு மரியாளுடன் சென்றார்.

மக்கள் திரளாகச் சென்றமையினால் அங்கு தங்குவதற்கு அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. அங்கிருந்த மாட்டுத் தொழுவத்தில் தான் அற்புதமான பிறப்பொன்று நிகழ்ந்து விடுகின்றது அந் நடுநிசியில் மந்தைகளுக்குகாவல்இருந்த இடையருக்கு இச் செய்தி அறிவிக்கப்படுகின்றது. கீழ்த் திசையிலிருந்து வரும் மூன்று ஞானிகளும், குழந்தையை வணங்கிய பின்பு மன்னன் ஏரோதன் அவரைக் கொலை செய்யத் தேடுகின்றான். அதிலிருந்து தப்புவதற்காகத் தேவதூதனின் வழிகாட்டலில் குடும்பமே எகிப்துக்குச் செல்கிறது என்று வரலாறு தொடர்கிறது.

பல்வேறு இசைக் கோலங்களை நம்முள்ளே அவரது ஜெனனம் சப்திக்கின்றது. எளிமை, பொறுமை, எதிலும் இறைசித்தம் என்ற சீலத்தின் விழுதுகள் இந் நிகழ்விலே வேரோடியிருப்பதை அவதானிக்க முடிகிறது. அவலங்களையும், கண்ணீர்களையும், அகதி வாழ்க்கையையும் கூட இங்கே நாம் பார்க்க முடிகின்றது.

பேரன்பின் வெளிப்பாட்டினாலே தான் இறைமகன் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். ஐக்கியத்தைக் கட்டி வளர்க்க நம்மிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டுமல்லவா? இதற்கெல்லாம் அடித்தளமிடுவது அன்பே என்றால் அது மிகையாகாது. அதனாலேயே இத்திருப்பிறப்பைப் பாடவந்த நாமக்கல்லாரும்—

அவதியுற்ற மாந்தர் தம்மை அறிவு காட்டி மேய்த்தவன் அன்பு என்ற அமிர்த நீரின் அருவி காண வாய்த்தவன்— என்று கூறுகின்றார்.

எங்கு நோக்கினாலும் மக்களால் ஜீரணிக்க முடியாத தொல்லைகளே படமெடுத்தாடுகின்றன வன்னிமண்ணில் இன்றுங் கூட விமானங்கள் குண்டுகளைத் துப்பிக்கொண்டிருக்கின்றன. பருவமழையின் கொடூரத்தினால் அங்கு குடிசைகள் மிதக்கின்றன. குமுறும் நெஞ்சோடு மரநிழல்களின் கீழ் தாய்மார்களின் ஓலம்; வறுமையின் கோரத் தாண்டவம்; வேட்டையாடும் தொற்று நோய்கள் இத்தகைய பரிதாபங்கள் பிரளயமாகி மக்களின் அமைதி வாழ்க்கையைக் கொத்திக் குதறுகின்றன. இக்கோர விளைவுகளை நினைக்கும் போதுதான் நெஞ்சு வலிக்கிறது.

வீடில்லை தங்குவதற்கு; வயிறார உணவில்லை; நோய்க்கு மருந்தில்லை; இதை எண்ணி மனம் நோகாத பொழுதில்லை. அகதி வாழ்க்கை உலகில் நமக்கென்றே எழுதப்பட்டு விட்டதோ என்ற ஏக்கம். எங்கும் எதிலும் பலியாடுகளாய் துன்பப்படுவது நாமே என்ற நிலை.

நமக்கு மட்டும் தானா அவலம்? அகதி வாழ்க்கை எனும் கொடுந்தீயின் நாக்குகள்

### ஞாயிறு நற்பிரசாதம்

அந்த இறை குமாரனைக் கூட விடாமல் துரத்திச் சுருட்டியிருக்கின்றன. உயிருக்குப் பயந்து, எகிப்துக்கு ஓடிய பயணங்கிழித்து விட்டகோடுகள் அவருக்கும் அகதி அனுபவம் தானே!

கிறிஸ்து அன்புக்கு அரசனாக, அமைதிக்கு ஆசானாக, தொண்டுக்கு மகுடமாக, தூய்மைக்குச் சிகரமாக இவ்வுலகிற்கு வந்தார். விலங்கை உடைத்தெறிந்து, விடுதலையின் சந்நிதிக்கு மக்களை வழிநடத்திச் சென்ற பெருந்தலைவன் அவர்.

[illegible] இனங்காட்டிக்கொண்ட பரிசேயர், சதுசேயர் என்ற போலிகளின் முகத்திரைகளைக் கிழித்தெறிந்த கர்மவீரனாகவும் அந்த மனிதப் புத்திரனைக் காணுகின்றோம்

தவறுகள் நிறைந்த நம் பழைய வாழ்க்கையை உதறிவிட்டு எழுவோம். துன்பப்படும் அயலவனில் கிறிஸ்துவைக் காண முயல்வோம். தியாகத்திலே கட்டியெழுப்பப்பட்ட இன்றைய நாளிலே, நாம் மனமாற்றமடைந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வோம். எங்கெல்லாம் அநீதி தலைவிரித்தாடுகின்றதோ, அங்கெல்லாம் அதை எதிர்த்துப் போராட உறுதிபூணுவோம்.

வெள்ளை மனத்துடன் அந்த நல்ல ஆயனிடம் போவோம். மக்களின் அபிலாசைகளை எடுத்தெறிந்துவிட்டு குறைப்பிரசவமான தீர்வுகளைத் தந்துகொண்டிருக்கும் ஆளுவோரின் மனமாற்றத்திற்காகவும் அவனிடம் அருள்வேண்டுவோம்.

இன்பம் நமக்கு எட்டாத பொருளல்ல; துன்பத்தைக் கண்டு கலங்காதிருப்போம். வைகறையைக்காண விரும்பும் ஒருவன் அஸ்தமனத்திற்கு முகங்கொடுக்கத்தானே வேண்டும். 'நீங்களும் ஒருவர் ஒருவரிடம் அன்பு கூர வேண்டுமென்பதே எனது கட்டளை' என்று அன்புச்சீடர் அருளப்பரின் நற்செய்தி மூலமாக நத்தார் நாளில் எம்மையெல்லாம் கிறிஸ்து அழைக்கின்றார்.

—மு. சிங்கராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி கல்வி ஆண்டு 1997 - 98

# பொறியியல்துறைக்கான வெட்டுப்புள்ளி விவரம்

கொழும்பு, டிச. 28

1997/98 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி விவரம் பத்துத்துறைகளுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவம், உயிரியல், முகாமைத்துவம், சட்டம், வர்த்தகம், கலை ஆகிய துறைகளுக்கான வெட்டுப் புள்ளிகள் தவிர்ந்த கணிதத் துறை சார்ந்த துறைகளுக்கே வெட்டுப்புள்ளி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப் படவுள்ள இரு பாடநெறிகள் நேரகாலத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாலேயே இத் துறைகளுக்கு விரைவாக வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய துறைகளுக்கான வெட்டுப்புள்ளி விவரம் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படும்.

பத்துத்துறைகளுக்கான வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு:-

| மாவட்டம் | பொறியியல் I | பொறியியல் II | புடவைத் தொழில் நுட்பம் | புவி விவரவியல் | கணனி விஞ்ஞானம் | கட்டட நிர்மாணம் | உடற் கல்வியியல் | மதிப்பீட்டுவியல் | வியாபார அறிவியல் I | வியாபார அறிவியல் III |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 278 | 272 | 269 | 266 | 267 | 214 | 225 | 223 | 214 | 211 |
| கம்பஹா | 261 | 257 | 256 | 255 | 255 | 222 | 215 | 211 | 209 | 206 |
| களுத்துறை | 269 | 266 | 265 | 263 | 265 | 208 | 217 | 213 | 213 | 209 |
| மாத்தளை | 235 | 233 | 243 | 231 | 230 | — | 181 | 192 | — | — |
| கண்டி | 267 | 264 | 261 | 259 | 260 | 214 | 208 | 209 | 205 | 203 |
| நுவரெலியா | 184 | — | — | — | 221 | — | 180 | — | — | — |
| காலி | 277 | 271 | 269 | 266 | 268 | 212 | 220 | 222 | 212 | 211 |
| மாத்தறை | 276 | 273 | 267 | 263 | 264 | 190 | 203 | 212 | 201 | 204 |
| அம்பாந்தோட்டை | 253 | 250 | 242 | 245 | 238 | — | 185 | 218 | 183 | 182 |
| யாழ்ப்பாணம் | 274 | 273 | 269 | 266 | 266 | — | 224 | 220 | 215 | 212 |
| கிளிநொச்சி | 196 | 187 | — | 180 | — | — | — | — | — | — |
| மன்னார் | 213 | 208 | — | 193 | 194 | — | — | — | — | — |
| முல்லைத்தீவு | 253 | 221 | 238 | 210 | 218 | — | 181 | — | — | — |
| வவுனியா | 242 | 234 | 226 | 224 | 218 | — | 196 | 195 | 189 | 188 |
| திருகோணமலை | 235 | 231 | 229 | 228 | 222 | — | 187 | 217 | 197 | 192 |
| மட்டக்களப்பு | 234 | 233 | 228 | 230 | 227 | 184 | 197 | 219 | 196 | 191 |
| அம்பாறை | 219 | 218 | 216 | 215 | 214 | 192 | 180 | 211 | 207 | — |
| புத்தளம் | 236 | 233 | 247 | 246 | 243 | 180 | 190 | 202 | 186 | 185 |
| குருநாகல் | 259 | 257 | 255 | 252 | 256 | 209 | 204 | 210 | 201 | 206 |
| அநுராதபுரம் | 219 | 215 | 208 | 214 | 213 | — | 181 | 191 | — | — |
| பொலன்னறுவ | 220 | 197 | 189 | 186 | 215 | — | 183 | 193 | — | — |
| பதுளை | 239 | 237 | 234 | 233 | 236 | 212 | 184 | 221 | 204 | — |
| மொனறாகலை | 198 | 195 | 190 | — | 188 | — | 185 | — | — | — |
| கேகாலை | 254 | 251 | 247 | 249 | 246 | 221 | 211 | 209 | 206 | 205 |
| இரத்தினபுரி | 241 | 238 | 236 | 235 | 240 | 200 | 197 | 200 | 189 | 188 |

## உதயன்

## அநியாயச் சாவுகள்!

உணவுப் பற்றாக்குறை, மருத்துவ வசதி கிடைக்காமை, போசாக்கின்மை, வறுமை ஆகிய காரணங்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஜெயபுரம் கிராமத்தில் பதின்மூன்று பேர் மரணமாகிய செய்தி அதிர்ச்சியைத் தருவதாகும்.

ஜெயபுரம் கிராமத்தில் உள்ள இரண்டு குடியிருப்புகளில் 23 நாள்களில் இந்த பதின்மூன்று மரணங்களும் நிகழ்ந்தன! மரணமானவர்களில் சிறுவர் முதல் வயது வந்தவர்கள் வரை அடங்குவர்.

வன்னியில் வாழும் மக்கள் நலனில் அரசு உரிய அக்கறை செலுத்தாமையையே இந்த அநியாயச் சாவுகள் எடுத்துக் காட்டுகின்றன என்பதில் வாதத்துக்கு இடமிருக்க முடியாது.

வன்னியில் உணவு, மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் சொல்லொணா அவலங்களை அனுபவிக்கிறார்கள்— என்று பலதரப்புகளும் கூறும் போதெல்லாம் அரசு மறுத்து வந்தது.

அந்த மறுப்புப் பொய் என்பது இப்போது நிரூபணமாகி உள்ளது!

ஆகப் பிந்தி வன்னி மக்களின் அவலங்களை, அங்குள்ள கஷ்டங்களை ஆராய்வதற்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளும் ஐக்கியதேசியக் கட்சியும் கலந்து கொண்டன.

அப்போது கூட அரசு வன்னி வாழ் மக்களின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வருவதாகவே (அரசு தரப்பில்) கூறப்பட்டது. அது உண்மையாயின் 23 நாள்களில் 13 பேர் மாண்டு போகும் நிலை வந்தது ஏன்?

தமிழர்களைத் தனது பிரஜைகள் என்றும், போர் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே அன்றி தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் கூறும் அரசு வன்னியில் வாழும் மக்களை இவ்வாறு சாகடிப்பது ஏன்?

தமிழர்களின் நியாயமான அரசியல் உரிமைகளை வழங்கும் முயற்சியாகவே அதிகாரப் பரவல் திட்டம் கொண்டு வரப்படுகிறது என்று அரசு கூறுகின்றது. ஆனால் அவர்களின் வாழ்வுரிமைகளைப் பேணுவதில் உரிய அக்கறை செலுத்தப்படவில்லை.

தனது பிரஜைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது ஓர் அரசின் பிரதான கடமை. இந்தக் கடமையின் பொருட்டே நாடுகள், அரசுகள் அத்தியாவசிய சேவைகளை வகுத்துக் கொள்கின்றன.

நாடு எந்த நெருக்கடியான நிலையில் இருந்த போதிலும் மக்களுக்குரிய அத்தியாவசிய சேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது நியதி.

ஆனால் வன்னி மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய சேவைகள் சரிவர இயங்கவில்லை. அவர்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை இவற்றுக்கு அரசு பல கட்டுப்பாடுகளையும், மட்டுப்படுத்தல்களையும் கொண்டு வந்ததால் மக்கள் மரணமடைகிறார்கள்.

தமிழர்களுக்கு உரிமை வழங்குவதாகக் கூறிக் கொண்டு அவர்களைச் சாகடிப்பது பெரும் அதர்மமானது. மனிதாபிமான நோக்குடனாயினும் தமிழர்களின் பட்டினிச் சாவை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## திம்பு கோட்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

திருந்தார்.

''தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை அங்கீகரித்து அவற்றின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வுத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என நாம் திம்பு காலத்தில் இருந்து வலியுறுத்தி வருகிறோம் இதுவே இன்றும் எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது'' என்று பிரபாகரன் தனது மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்து திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் கோடி காட்டி இருப்பதாக ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக பொது மக்களில் ஒருவர் நேற்று தொலைபேசி மூலம் ஜனாதிபதியிடம் கேள்வி கேட்டபோதே ஜனாதிபதி திம்புக் கோட்பாட்டை தாம் நிராகரிப்பதாகப் பதில் அளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தில் திம்புக் கோரிக்கையை விட கூடுதல் விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசின் தீர்வுத் திட்டம் இனப்பிரச்சினைக்கு மட்டுமல்ல சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடியதாகும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1994 ஓகஸ்ட் முதல் 8 மாதங்கள் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. இக் காலகட்டத்தில் 43 அல்லது 44 கடிதப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

15-12-94 இல் தீர்வுத் திட்டம் ஒன்று அரசினால் தயாரிக்கப்பட்டது. இது குறித்து கருத்துப் பரிமாறுவதற்காக ஜனவரி, பெப்ருவரி, மார்ச் மாதங்களில் விடுதலைப் புலிகளுக்குக் கடிதங்கள் எழுதினோம். ஆனால் பதில் எதுவும் கிடைக்கவில்லை. அவர்களோ இதனை முறித்துக் கொண்டு போருக்கு ஆயத்தமானார்கள்.

பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாகவே அரசு தற்போது தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளது.

இனப்பிரச்சினை, யுத்தம் முதலிய விடயங்களில் எதிர்க்கட்சிகள் போதிய ஒத்துழைப்புத் தருவதில்லை. சில கட்டங்களில் குழப்புகின்றன.

எதிர்க்கட்சித் தலைவருடன் 5 தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. சாதகமான பதில் இல்லை. எதிர்க் கட்சித் தலைவருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த எமது அரசு முயல்கிறது.

அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்துக்கு சகலரும் அரசியல் பேதங்களைக் களைந்து ஆதரவு அளிக்க முன்வர வேண்டும்.

நாளுக்கு நாள் குற்றச் சாட்டுக்களையும் புதுப்புது யோசனைகளையும் முன்வைப்பதில் அர்த்தமில்லை. இன்றைய பிரச்சினைக்கு அடித்தளம் இட்டவர்கள் அவர்களே. இதனை அவர்கள் திட்டவட்டமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

### தேர்தல் ஏன்?

யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமராத நிலை விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் தொடரும் யுத்தம், தேர்தலை ஒத்திவைக்க தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை ஆகியவற்றுக்கு மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவது ஏன் என்ற மற்றொரு கேள்விக்கு ஜனாதிபதி பதில் அளிக்கையில் யுத்தத்தில் இருந்து மக்களை விடுவித்து ஜனநாயக சூழலை ஏற்படுத்தவே உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. இத் தேர்தல் 100 சதவீதம் சரியான முறையில் நடைபெறா விட்டாலும் 75 சத வீதமாவது சரியான முறையில் நடைபெற வேண்டுமென நம்புகிறேன் என்றார்.

(இ-7-21)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

கு சிவராசா என்ற இந்த கிராம அலுவலர் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் பணியாற்றி வந்தார்.

இவர் நேற்று முன்தினம் கல்லடியிலுள்ள தனது பெற்றோரைப் பார்ப்பதற்கு வந்த சமயம் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டார்.

(இ-21)

## சீனா-ஹொங்கொங்...

(முதலாம் பக்கத் தொடர்)

சியல் ஏற்பாடுகளை இலங்கையும் கவனத்திற் கொள்வது சிறப்புடையதாகும்.

ஆசிய நாடுகளில் இடம் பெறும் அரசியல் நிகழ்வுகளில் முக்கியத்துவம் உடையதாக சீனாவுடனான ஹொங்கொங்கின் இணைப்பு விளங்குகிறது.

இது சமாதான ரீதியான நடவடிக்கை ஊடாகவே செயற்படுத்தப்பட்டது. தெளிவான சிந்தனை, தீர்க்கமான அணுகுமுறை நுணுக்கமான பேச்சுவார்த்தை எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் அறிவாண்மை முதலியன இதற்குப் பங்களிப்புச் செய்துள்ளன.

சீனாவினதும், ஹொங்கொங்கினதும் அரசியல் இயங்கும் முறைகளும் —

பொருளியல் தத்துவங்களும் — அரை நூற்றாண்டுகளாக இரு வேறுபட்ட பாதைகள் மூலமே சென்றிருக்கின்றன.

சீனாவிடமிருந்து தவிர்க்க முடியாத ஹொங்கொங்கின் தொடர்பும், சீனாவின் தேசிய ஒருங்கிணைப்பின் தவிர்க்கமுடியாத அவசியங்களும் அரசியல், பொருளாதார ரீதியான யதார்த்தங்களை அங்கீகரிக்கக் கோரின.

பல்வேறு தன்மைகளின் அடிப்படையில் எதிர்காலத்தை அமைப்பதற்கான அவர்களின் இந்த உடன்பாடு அவர்களின் மதிநுட்பத்தின் வெளிப்பாடாக தெரிகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிங்களவர்களும், தமிழர்களும் இருவேறு வகைகளில் இனங்காணக்கூடிய தனிப் பிரிவினரா. வாழ்ந்து வந்திருக்கின்றனர்க

புவியியல் ரீதியில் அவர்களது பகுப்பு மிகத்தெளிவான எல்லைக் கோட்டைக் கொண்டிருந்தது.

தொன்மையான கலாசார அடையாளங்களில் இருந்து வரும் அரசியல் ஏற்பாடுகளுக்கான உத்வேகம் தமிழர்களிடையே மிக உறுதியாக இருக்கிறது.

இப்படி அவர் கூறினார்.

### நாளை

**மார்கழி 14**

திங்கட்கிழமை

திதி: அமாவாசை முன்இரவு 11 31 வரை.

நட்சத்திரம்: மூலம் முன்இரவு 10.05 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 12 28-1 58

ராகுகாலம்: 7.58-9.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்-முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்)
ளைப் பகுதிமுழுவதும் பதற்ற நிலை காணப்பட்டது.

மத்திய சந்தையிலுள்ள சுமார் 25 தமிழ்க் கடைகளும் பத்து வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

நேற்று மதியம் 12.30 மணி முதல் இன்று காலை 6 மணி வரை அங்கு ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(இ-9-7-21)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் அரசநாயகம்

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் அரசநாயகம் 26-12-1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், விஜயதேவி, புஸ்பராணி (கொழும்பு), வசுந்தராதேவி (சாவகச்சேரி), வசந்தகுமார் (E S.K Jewellary) [ஆகியோரின்] அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற நவரட்ணம், E.S கந்தசாமி (கண்ணா Jewellsry), சி. நடராசா (முன்னாள் நகரசபை ஆணையாளர், சாவகச்சேரி), விக்கினேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-12-1997 சனிக்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. வசந்தகுமார்
(மகன்)

பிரசாத் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(52179)

### பரமநாதர் தங்கம்மா

(காரைநகர் கருங்காலி)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் தற்போது மல்லாவியில் வசித்து வந்தவருமாகிய பரமநாதர் தங்கம்மா 20-12-97 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 20-12-97 அன்று மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ப. திருஞானசம்பந்தன்
(சம்பந்தன் - மகன்)

393/21, கோவில் வீதி,
நல்லூர்.

(52155)

### திருமதி பாக்கியம் இராசதுரைசிங்கம்

(காரைநகர்)

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் இராசதுரைசிங்கம் 26-12-1997 இல் பதுளையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரைசிங்கத்தின் அன்பு மனைவியும், இராமலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், நல்லதம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மற்றும் இராஜவரோதயம் (லண்டன்), இராஜேஸ்வரி (கிளிநொச்சி), இராஜேந்திரன் (பிரான்ஸ்), இராஜரத்தினம் (பிரான்ஸ்) நாகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

தகவல்:
ந. மகேஸ்வரி
(மைத்துனி)

வாரிவளவு,
காரைநகர்.

(52165)

### சின்னத்தம்பி விஸ்வலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விஸ்வலிங்கம் 27-12-97 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகமுத்துவின் கணவரும் மற்றும் பாலசிங்கம் (ஆசிரிய ஆலோசகர்-வலயம் II, சரோஜினிதேவி (உரும்பிராய்), நாகேஸ்வரி (கமலா, ஏழாலை), தவமணி (நீர்கொழும்பு), ரவிராஜ் (கனடா), மோகன்ராஜ் (லங்கா சிமெந்து லிமிடெட்), சந்திரவதனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீதரன் (உரும்பிராய்), குமாரவேல் (கணக்காளர்), சின்னத்தம்பி (நீர்கொழும்பு), நிர்மலாதேவி (கனடா), சிவாஜினி (உரும்பிராய்), நவரட்ணராஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், தர்சன், நிஷாகன், அனோஜன், ரேகா, சகிர்தா, தனுஜா, துவாரகன், கிரீசன், மங்களேசன், கேதா, கேதீசன், நகீசன், நீரஜா, விஜிதா, ரம்மியா, குமணன், லக்ஷன், சுமணன், மகிளா, பிரசாந், சுகிர்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-12-97) பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவாடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பாலசிங்கம்
மோகன்ராஜ்
(மக்கள்)

சிவன் வீதி,
உருப்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(52172)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ... வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 28-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சர்வதேச எல்லையைத் தாண்டினாலும்

# இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் ஸ்ரீலங்கா கடற்படை நடத்தாதாம்

## உறுதியளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்

டில்லி, டிச. 28

இந்திய மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கும் போது அவர்கள் மீது கண்மூடித்தனமாகச் சுடுவதில்லை என ஸ்ரீலங்கா கடற்படை இந்தியாவிடம் உறுதியளித்துள்ளது.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் விஷ்வபகவத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சென்னை வந்துள்ள இந்தியக் கடற்படைத் தளபதி நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்திய மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் குறித்து சில மாதங்களுக்கு முன் ஸ்ரீலங்காவிடம் முறையிட்டபோது இந்த உறுதி அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

கடந்த ஒன்றரை மாதகாலமாக இத்தகைய தாக்குதல்கள் எதுவும் நடத்தப்படவில்லை எனவும் அவர் சொன்னார்.

நேற்று முன்தினம் காலை தமிழக முதல்வர் மு. கருணாநிதியைச் சந்தித்த போது இவற்றைத் தாம் அவரிடம் கூறியதாகவும் இந்தியக் கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

[உ-9]

## இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்)
டின் எந்த ஒரு போராளிக் குழுவுக்கும் ம.தி.மு.க. ஆதரவு தராது என்று குறிப்பிட்டார்.

மறுமலர்ச்சி தி. மு. க., பாரதீய ஜனதா — அ. தி. மு.க. கூட்டணியில் இணைந்திருப்பது தெரிந்ததே. (இ-9)

## கலவரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)
யிலான இனக்கலவரமாக அது உருவெடுத்தது.

கடைகள் தீவைக்கப்பட்டுள்ளன. அதாவது போத்தல்களில் திரியைக் கொளுத்தி வீசி கடைகளுக்கு தீயிட்டுள்ளனர்.

கமுதாவளைச் சந்தைப் பகுதியில் தமிழ் மக்கள் அதிகம் வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் 500 க்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் அங்கு வந்து தமிழர்களைத் தாக்குவதற்காக நிற்பதாக தகவல்கள் வந்துள்ளன.

அதன் பின்னர் நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசிய போது மாத்தளை மாவட்ட அரச அதிபர் இராணுவத்தை அழைத்திருப்பதாக அவர்கள் சொன்னார்கள்.

தமிழர்கள் வீடுகளையும் சொத்துக்களையும் விட்டுவிட்டு காடுகளிலும் உறவினர்கள் வீடுகளிலும் ஒளிந்திருப்பதாகத் தெரிகின்றது என்றார். (இ-9)

## வாழைச்சேனைப் பகுதியில் தாக்குதல்

கொழும்பு, டிச. 28

வாழைச்சேனையில் படையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும்—

4 கைக்குண்டுகளும், தொடர்பு சாதனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் — பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(இ-9)

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
ஆண்டு- 5 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை
28 - 12 - 97 இன்று [ஞாயிறு]
பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகின்றது.
தொகுப்பு: பா. கிருபாகரன்
(விசேட பயிற்சி, கணிதம்)
வினாத்தாள் தேவையான நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.
ரேடியன்ற் கல்வி நிலையம்
கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
குறிப்பு:
1998 இற்கான ஆண்டு 6, 7, 8 9, 10, 11 கணித பாட பிரத்தியேக வகுப்புக்களுக்கான நேரம் ஒதுக்கப்பட்டுவிட்டது.
(52177)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரட்ணம் மகேஷ்வரி

ஆலடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகரட்ணம் மகேஷ்வரி 27-12-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P. W. D. ஓவசியர் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், றஜனி (திருகோணமலை), றாஜி, ராதா, ரேணுகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரராஜசிங்கம் (திருகோணமலை), பாலபாஸ்கரன், யோகநாதன், சிறீஸ்கந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், மதன் (U.K.), பிரஷாந்தி, சஞ்சு, சிந்துஜா (திருகோணமலை), மதுரா, மயூரா, ரஜீவன், ஜனார்த்தனன், திவாகர், சங்கவி, அனோஜன், நிரோஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தம்பிஐயா, மார்க்கண்டு (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கரையான்பிட்டி மயானத்தில் இன்று பிற்பகல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49892)

றீகல் மினி
ஈச்சமோட்டை.
10 அடி அகலத்திரையில்
பாட்ஷா
நேரம்: 10 30 — 2.30
தொடக்கம்
28 — 12 — 97
(52170)

சிவா
திரை அரங்கு
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தினசரி 10.30, 2 30
சாய்குமார்
நடித்த
தமிழ்நாடு பொலீஸ்
(52174)

சிறந்த தெரிவு! நிதான விலை!
மலிவு விலை தைப்பொங்கல் வரை.
இப்போது இறக்குமதி செய்யப்பட்ட
சூட்டிங் 300/- இல் இருந்து 200/- வரை குறைக்கப்பட்டது.
றெடிமற் ஜீன்ஸ் 550/- இல் இருந்து 350/- வரை குறைக்கப்பட்டது.
ஜெலோலயின்சூட்டிங் 175/- இல் இருந்து 140/- வரை குறைக்கப்பட்டது.
மற்றும் பல புடைவை வகைகளுக்கு
சோதி புடைவை அகம்
11, சிறப்பு அங்காடி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(52 ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org